முருகப்பெருமான் துணை

**மகான் ராகு பகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.04.2023, செவ்வாய்கிழமை

1. அருமருந்தாகி நின்று அருளும்
ஆறுமுகப் பெருமான் திருவடி போற்றி
பெருமைபட சோபகிருது தகர்திங்கள்
புகலுவேன் விய திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 12 ம் நாள், 25.04.2023 செவ்வாய்கிழமை)
2. வாரமதில் அனுகூல ஆசி
வளமுற ராகுபகவான் தானும்
ஆறுமுக அரங்கஞானிகேட்க உரைப்பேன்
அகிலத்தார் அவரவர் கரும வினை வழி
3. வினைவழி பிணி சோடையென
வளர்ச்சி மாற்றம் காணா
தனை வருத்தி அல்லலும்
தகாத மதுமாது சூதுவழி முடங்கி
4. முடங்கியே பிறவிபலத் தொடர்ந்திட
மொழிகுவேன் சகலவித இன்னல்
அடங்கியே அகற்றி மீண்டிட
அடுத்துப் பிறவி காணா நிலைத்திட
5. நிலைத்திட கலியுக மக்கள்
நிலமதனில் அவதார ஞானிகளை
பிழையற சரணாகதி அடைந்து
பிறவி இனி வேண்டாம் எனக் கருதி
6. கருதி முந்தை வினை போக்கி
காக்கக் கடவாய் அப்பனே என
உறுதி கொண்டு தொடர்ந்துவர
உள்ளுள் அகபூசையாக அனுதினம்
7. அனுதினமும் செபதபம் தொடர
ஆத்மபலம் தானே அடைந்து
ஞானமாக அவதாரம் எடுத்த
ஞானி அரங்கன் தொடர்புக் கூடி

8. கூடியே வணங்கித் தீட்சை
குருகவசமாக அடைந்து
இடர்களை மாயை சோதனைகளை
இன்னலான வினைகளையும் வென்று

9. வென்று தேறுவர் மக்கள்
வினைவழி அனுகும் சோடை
என்றும் தொடரா காப்புக்கிட்டி
இவ்வுலகில் தன்பிறவி நோக்கம்

10. நோக்கம் உண்மை அறிவுத்தெளிவு
ஞானமாக அடைந்துத் தேறி
ஆக்கமுடன் இனி பிறவாத
அழியாத் தன்மை கண்டுமே

11. கண்டுமே அரங்க ஞானி வழி
கலியினில் சகலருக்கும் பயனுற
தொண்டாற்றி நிலை உயர்வர்
தெரிவித்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—